58—

புதிய வட்டம்

***15994—திரு. அ. ராமு:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குன்னூர் தொகுதி, கோத்தகிரி வட்டத்தைப் பிரித்து புதியதாக கீழ்கோத்தகிரி வட்டம் உருவாக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டம், கீழ்கோத்தகிரி உள்வட்டத்தில் மக்கள்தொகை 58,874 ஆகவும், அதன் நிலப்பரப்பு 11,586.34.5 ஹெக்டேர் ஆகவும், அதில் பெரும்பாலான நிலங்கள் வனம் மற்றும் எஸ்டேட் நிலங்களாகவும் உள்ளன. கோத்தகிரியிலிருந்து கீழ்கோத்தகிரி உள்வட்டம் சுமார் 15 கிலோ மீட்டர் சுற்றளவைக் கொண்டுள்ளது. மேலும், புதிய வட்டம் உருவாக்குதல் தொடர்பாக அரசாணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை, நாள் 9–6–2003–ன்படி, புதிய வட்டம் அமைப்பதற்கான நிபந்தனைகள் தற்போதைய நிலையில் பூர்த்தியாகவில்லை. ஆகவே, கீழ்கோத்தகிரியில் புதிய வட்டம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் தற்போது எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராமு அவர்கள்.*

திரு. அ. ராமு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களையும், அனைவரின் மனதிலும் நிறைமனதுடன் வாழ்ந்து மறைந்த மாண்புமிகு புரட்சித் தலைவி தங்கத் தாரகை அம்மா அவர்களையும் வணங்குகிறேன்.*

2019 பிப்ரவரி 12]

வறுமைக் கோட்டிற்குக்கீழே வாழும் 60 இலட்சம் அமைப்புசாரா ஏழையெளிய மக்களுக்கு சிறப்பு நிதியாக 2,000/– ரூபாய் வழங்கப்படும் என்று நேற்றையதினம் அறிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும் வணங்குகிறேன்.

குன்னூர் தொகுதியிலுள்ள கோத்தகிரி வட்டம், கீழ்கோத்தகிரி பகுதியிலிருந்து சுமார் 20 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. அப்பகுதியில் வாழும் மக்கள் தேயிலை விவசாயிகளாகவும், கூலித் தொழில் செய்து வருபவர்களாகவும் இருக்கிறார்கள். ஆகையால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, கோத்தகிரி வட்டத்தைப் பிரித்து, புதியதாக கீழ்கோத்தகிரி வட்டத்தை உருவாக்குவதற்கு மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

கோத்தகிரி வட்டத்திற்குட்பட்ட ஜெகதலா பேரூராட்சி, கோத்தகிரியிலிருந்து சுமார் 25 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. ஆகையால், ஜெகதலா பேரூராட்சியை 7 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள குன்னூர் வட்டத்துடன் இணைத்தால் அப்பகுதி மக்களுக்கு மிகவும் வசதியாக இருக்கும் என்பதால் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஜெகதலா பேரூராட்சியை குன்னூர் வட்டத்துடன் இணைக்க முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மக்களின் நலன் கருதி புதிய வட்டத்தை உருவாக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கின்றார். தற்போது, விதிமுறைகளில் அதற்கு இடமில்லை என்றாலும்கூட, அது மலைப் பகுதியாக இருக்கின்ற காரணத்தினால் சிறப்பு நிகழ்வாகக் கருதி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கும், கனிவான பரிசீலனைக்கும் எடுத்துச் செல்லப்பட்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னொருகோரிக்கையையும் வைத்திருக்கின்றார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்த கோரிக்கையின்படி, ஜெகதலா பேரூராட்சியை குன்னூர் வட்டத்துடன் இணைக்கும் பொருட்டு, ஜெகதலா கிராமத்தில் பொது விளம்பரம் செய்யப்பட்டது. ஜெகதலா–2 கிராமத்திற்குட்பட்ட பெட்டட்டி குக்கிராமமானது கோத்தகிரியிலிருந்து 10 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. இக்கிராமத்தில் 116 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 432 ஆண்களும், 570 பெண்களும் வசித்து வருகிறார்கள். இவர்களில் பெரும்பாலானோர் அதே கிராமத்தில் விவசாயத் தொழிலைச் செய்து வருகிறார்கள். இவர்களது நிலங்களும் கோத்தகிரி வட்டம், நடுஹட்டி கிராமத்தில் அமைந்துள்ளன. எனவே, ஜெகதலா பேரூராட்சியை குன்னூர் வட்டத்துடன் இணைத்தால் பெட்டட்டி ஊர் மக்கள் குன்னூர் வட்டாட்சியர் அலுவலகம் செல்ல சுமார் 13 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டியதிருக்கும். இக்கிராமத்திலுள்ள குழந்தைகள் பெரும்பாலானோர் கோத்தகிரியில் உள்ள பள்ளிகளிலே படித்து வருவதாகவும், தங்களுக்கு குன்னூர் சென்றுவர 13 கிலோ மீட்டர் தொலைவு உள்ளதாகவும், தங்களை கோத்தகிரி வட்டத்திலேயே இணைத்திருக்க ஆவன செய்ய வேண்டுமென்றும் தெரிவித்திருக்கிறார்கள். மேலும், அங்கே வாழும் பொது மக்களும் அதே கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: ஆகவே, மக்கள் ஆட்சேபணை செய்து வருவதால் நாம் அதனை மறுபரிசீலனை செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறோம். எனவே, ஜெகதலா பேரூராட்சியை குன்னூர் வட்டத்துடன் இணைக்கக்கூடிய அந்தக் கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று மறுபரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2019 பிப்ரவரி 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராமு அவர்கள்.*

திரு. அ. ராமு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெகதலா பேரூராட்சியை குன்னூர் வட்டத்துடன் இணைக்க மறுபரிசீலனை செய்யப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு தங்கள் வாயிலாக நன்றியைக் கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 59, மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

59—

பேருந்து வசதி

***36680—திரு. வாகை சந்திரசேகர்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பிராட்வே, திருவான்மியூர் மற்றும் கோயம்பேடு பகுதிகளிலிருந்து வேளச்சேரி காந்தி சாலை வரை மீண்டும் பேருந்துகள் இயக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*தற்போது மாநகரப் போக்குவரத்துக் கழகத்தால் வழித்தடம் எண் 18*P*–ல் காலை 8 மணி அளவில் ஒரு பேருந்து, காந்தி சாலை, வேளச்சேரி மருத்துவமனையிலிருந்து பிராட்வே வரை பொது மக்களது வேண்டுகோளுக்கிணங்க இயக்கப்பட்டு வருகிறது. வழித்தடம் எண்* A*51–ல் 10 பேருந்துகள், 21*L*–ல் 4 பேருந்துகள்,* M7*–ல் 8 பேருந்துகள்,* M*70–ல் 21 பேருந்துகள், 570–ல் 52 பேருந்துகள், ஆக மொத்தம், 96 பேருந்துகள் வேளச்சேரி பிரதான சாலை, காந்தி சாலை சந்திப்பு பேருந்து நிறுத்தத்தில் நின்று பயணிகளை ஏற்றி இறக்கி வருகிறது. எனவே, பிராட்வே, திருவான்மியூர் மற்றும் கோயம்பேடு பகுதிகளிலிருந்து வேளச்சேரி பிரதான சாலை, காந்தி சாலை சந்திப்பு பேருந்து நிறுத்தம் வழியாகப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருவதால் இவ்வழித்தடப் பேருந்துகளை காந்தி*